இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 19-06-2024

# கையாலாகாத பழனிசாமி

“ஆடத் தெரியாதவள், தெரு கோணல் என்றாளாம்” என்று ஒரு பழமொழி உண்டு. அது இன்றைய சூழலில் அ.தி.மு.க. பழனிசாமிக்குத்தான் பொருந்தும்.

எடப்பாடி பழனிசாமி வசம் அ.தி.மு.க. வந்தது முதல் அவர் எதிர்கொண்ட தேர்தல்கள் அனைத்திலும் தோல்வி. தோல்வியைத் தவிர வேறு இல்லை. அப்படி ஒரு அரசியல் வரலாறு அவருக்கு இருக்கிறது.

2019 - நாடாளுமன்றத் தேர்தல்

2019 - சட்டமன்ற இடைத் தேர்தல்

2019 - 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல்

2021 - ஊரக உள்ளாட்சித் தேர்தல்

2021 - தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்

2022 - நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்

2023 - ஈரோடு இடைத்தேர்தல்

2024 - நாடாளுமன்றத் தேர்தல் - ஆகிய 8 தேர்தல்களிலும் தோற்றவர் தான் பழனிசாமி. விக்கிரவாண்டி இடைத் தேர்தலிலும் நின்றால் தோற்கத் தான் போகிறார். அதனால்தான், ‘தேர்தல் நேர்மையாக நடக்காது’ என்று சொல்லி தேர்தலைப் புறக்கணித்திருக்கிறார் பழனிசாமி.

**இவரது தேர்தல் புறக்கணிப்புக்குப் பின்னால் இரண்டு தந்திரங்கள் இருக்கின்றன.**

**ஒன்று, அ.தி.மு.க. போட்டியிட்டால் நிச்சயம் தோற்றுப் போகும். எனவே அந்தத் தோல்வி முகத்தை மறைக்கலாம் என்பது!**

**இரண்டு, தனது எஜமானன் பா.ஜ.க.வின் வேட்பாளருக்கு மறைமுகமாக ஆதரவு தெரிவித்து தனது அடிமை விசுவாசத்தைக் காட்டிக் கொள்ளலாம் என்பது.**

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தனித்து நின்று பா.ஜ.க.வுக்கு எதிரான வாக்குகள் முழுமையாக தி.மு.க. கூட்டணிக்கு போகவிடாமல் தடுக்க பழனிசாமியை பயன்படுத்தியது பா.ஜ.க. அதிலும் வெற்றி பெற முடியாமல் மண்டை உடைந்தது தான் மிச்சம்.

அதேதான் விக்கிரவாண்டி இடைத் தேர்தலிலும் நடக்கப் போகிறது. 2019 நாடாளுமன்றத் தேர்தலிலும், 2021 சட்டசபைத் தேர்தலிலும் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் கூட்டணி அமைத்துத்தான் போட்டியிட்டன. கூட்டணியாகத்தான் தோற்றன. எனவே, இவர்கள் சேர்ந்து வந்தாலும், பிரிந்து நின்றாலும் தோல்வி தான்.

பா.ஜ.க.வுக்கு மட்டுமல்ல, பா.ஜ.க.வுக்கு பல்லக்குத் தூக்கிகளாக யார் இருந்தாலும் அவர்களைத் தமிழ்நாட்டு மக்கள் தோல்வி அடையச் செய்வார்கள். இதனை மறந்து விட்டு பா.ஜ.க. - பா.ம.க. - அ.தி.மு.க. ஆகிய கட்சிகள் பகல் வேஷம் கட்டி ஆடும் பம்மாத்து அரசியலை இனியாவது நிறுத்திக் கொள்ள வேண்டும்.

**பா.ஜ.க.வின் பத்தாண்டுகால அழிவு நடவடிக்கைகள் அனைத்துக்கும் துணை போன கட்சிகள்தான் அ.தி.மு.க.வும் பா.ம.க.வும். குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக அ.தி.மு.க.வும் பா.ம.க.வும் மாநிலங்களவையில் வாக்களிக்காமல் இருந்திருந்தால் அந்தச் சட்டமே நிறைவேறி இருக்காது. சிறுபான்மை இசுலாமிய இன மக்களுக்கும், ஈழத் தமிழ் மக்களுக்கும் பச்சைத் துரோகம் இழைத்தவர்கள்தான் அ.தி.மு.க.வும் பா.ம.க.வும் என்பதை தமிழ்நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை.**

கடைசி வரையில் பா.ஜ.க.வின் அனைத்து மக்கள் விரோதச் சட்டங்களுக்கும் ஆதரவாக இருந்ததால்தான் ஒடிசாவில் நவீன் பட்நாயக்கும், ஆந்திராவில் ஜெகன் மோகனும் தோற்கடிக்கப்பட்டார்கள் என்பதை அ.தி.மு.க., பா.ம.க. போன்ற கட்சிகள் மறந்து விடக் கூடாது. இந்தக் கட்சியின் தலைமைகளை விட மக்கள் விழிப்பானவர்கள், விபரம் ஆனவர்கள். அவர்களுக்கு கட்சிகள் எடுக்கும் நிலைப்பாடுகள் யாரைக் காப்பாற்ற என்பது நிச்சயமாகத் தெரியும்.

தேர்தல் தேதி அறிவித்ததும் தி.மு.க. கூட்டணி வேட்பாளராக அன்னியூர் சிவா என்ற சிவசண்முகத்தை அறிவிக்கிறார் தி.மு.க. தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். அ.தி.மு.க. கூட்டணியும் பா.ஜ.க. கூட்டணியும் அதன்பிறகும் வேட்பாளரை அறிவிக்க முடியாமல் திணறுகிறது. பா.ம.க. தலையில் கட்டித் தப்பித்துக் கொண்டது பா.ஜ.க.. தோல்வி நிச்சயம் என்று பா.ஜ.க.வுக்குத் தெரியும். அதனால் பா.ம.க.வை பலியாடாக பயன்படுத்திக் கொண்டது பா.ஜ.க..

அ.தி.மு.க.வுக்கு அப்படி எந்தப் பலியாடும் அந்தக் கூட்டணியில் இல்லை. உடனே, ‘தேர்தல் நேர்மையாக நடக்காது’ என்று சொல்லி தேர்தலைப் புறக்கணித்து விட்டார்கள். தேர்தலில் நின்றால் தானே ஒன்பதாவது தோல்வி என்பார்கள், தேர்தலிலேயே நிற்கவில்லை என்றால் சொல்ல முடியாது அல்லவா என்று புத்திசாலித்தனமாக முடிவெடுத்து விட்டதாகக் காட்டிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

‘நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பல்வேறு அராஜகங்களையும் தில்லுமுல்லுகளையும் செய்து தி.மு.க.வினர் வெற்றி பெற்றனர்’ என்று பழனிசாமி சொல்லி இருக்கிறார். என்ன தில்லுமுல்லு செய்தார்கள்? எங்கே அராஜகங்கள் நடந்தன என்பதைப் பழனிசாமி சொல்ல வேண்டாமா? நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலை நடத்தியது தி.மு.க. அரசு அல்ல. மத்திய தேர்தல் ஆணையம் நடத்தியது. அதில் உட்கார்ந்து இருப்பவர்கள் அனைவரும் நரேந்திர மோடியால் நியமிக்கப்பட்டவர்கள். நரேந்திர மோடிக்கு எதிராக, தி.மு.க.வை தேர்தல் ஆணையர்கள் தில்லுமுல்லு செய்து வெற்றி பெற வைத்து விடுவார்களா? வெற்றி பெற வைத்தால் அவர்களால் அந்தப் பதவியில் இருக்க முடியுமா? தேர்தல் ஆணையர்கள் மோடியின் ஆட்கள் என்பது சாதாரணக் குழந்தைக்குக் கூடத் தெரியுமே? இந்த மாநிலத்தை ஆண்ட பழனிசாமிக்கு இது கூடத் தெரியாதா?

தமிழ்நாட்டில் எந்தத் தொகுதியிலாவது, எந்த ஊரிலாவது சிறு வன்முறை நிகழ்ந்ததா? பூத் கைப்பற்றப்பட்டதா? கள்ள வாக்கு செலுத்தியதாக யாராவது கைது செய்யப்பட்டார்களா? பா.ஜ.க. ஆளும் மாநிலத்தில்தான் அது அதிகம் நடந்தது. அப்படி ஏதும் நடக்காத நிலையில் இட்டுக் கட்டி, பொய்மூட்டைகளை அவிழ்க்கிறார் பழனிசாமி.

**தேர்தலைப் புறக்கணிப்பதாக இருந்தால் நேர்மையான காரணத்தை பழனிசாமி சொல்லட்டும், அதைவிட்டு விட்டு தி.மு.க. மீது அவதூறுகளை எதற்காக அள்ளி வீசவேண்டும்?**

**தேர்தல் அரசியல் களத்தில் இல்லாமல் தன்னைத்தானே தோல்வி அடைய வைத்துக் கொண்டுள்ளார் பழனிசாமி. மக்கள் தான் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமா? இதோ, பழனிசாமியே தனக்கான தோல்வியைத் தழுவிக் கொள்கிறார். இது பாதம் தாங்கியின் அடுத்த பாணியாக பதிவு செய்வோம்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (18.06.2024) தலைமைச் செயலகத்தில், சென்னையிலுள்ள ஆஸ்திரேலியா நாட்டுத் தூதர் சிலாய் சாக்கி (Ms. Silai Zaki) அவர்கள் சந்தித்துப் பேசினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தூதரகத்தின் மேலாண்மை அலுவலர் ஓஸ்நட் ஓரன் (Ms Osnat Oren), ஆஸ்திரேலிய வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஆணையர் அப்துல் எக்ராம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (18.6.2024) தலைமைச் செயலகத்தில், பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே சாதி, இன உணர்வுகளால் உருவாகும் வன்முறைகளைத் தவிர்க்கவும், நல்லிணக்கம் ஏற்படுத்திடவும், வழிமுறைகளை வகுத்திடவும் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு அவர்கள் தலைமையிலான ஒரு நபர் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. உடன் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் க.அறிவொளி, ஆராய்ச்சியாளர் டாக்டர் ஆனந்தி ஆகியோர் உள்ளனர்.

### பயிற்சி வகுப்புகளை பணியில் சேர்ந்துள்ள

# புதிய பொறியாளர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்!

## பொறியாளர்களுக்கான அடித்தளப் பயிற்சி வகுப்பினைத் தொடங்கி வைத்து அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 19 -

சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று (18.6.2024), நெடுஞ்சாலைத்துறையில் புதியதாக பணியில் சேர்ந்துள்ள உதவிப் பொறியாளர்களுக்கும் மற்றும் பதவி உயர்வு பெற்ற இளநிலைப் பொறியாளர்களுக்கும் அடித்தளப் பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்து, உரையாற்றினார்.

அப்போது அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

**கற்றார்முன் கற்ற செலச்**
**சொல்லித் தாம்கற்ற**
**மிக்காருள் மிக்க கொளல்.**
(குறள் 724)

பொருள்: அறிஞர்களின் அவையில் நாம் கற்றவைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு எடுத்துச் சொல்லி நம்மைவிட அதிகம் கற்றவரிடமிருந்து மேலும் பலவற்றை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

என்ற குறளுக்கேற்ப நெடுஞ்சாலைத்துறை பயிற்சி மையம் இயங்கி வருகிறது என்று கூறி அமைச்சர் அவர்கள் உரை நிகழ்த்த தொடங்கினார்கள்.

“நீங்கள் ஒன்றைச் சொன்னால், கேட்டு அதை மறந்து விடுவேன்; கற்பித்தால் அதை நினைவில் கொள்வேன்; என்னை ஈடுபடுத்தினால் நான் அதைக் கற்றுக் கொள்வேன்; என்று பயிற்சியின் பெருமையைப் பற்றி பெஞ்சமின் பிராங்கிளின் என்ற அறிஞர் எடுத்துரைத்துள்ளார். அதுபோல, பொறியாளர்களுக்குப் பயிற்சி மிகவும் முக்கியம் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

பயிற்சி பற்றி இந்திய சாலைகள் குழுமம் விரிவான வழிகாட்டுதல்களை IRC:128ல் வெளியிட்டுள்ளது. அந்த வழிகாட்டுதல்களின் பின்னுரையில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

புதிதாக பணியில் சேர்ந்த பொறியாளர்களுக்கு நெடுஞ்சாலைத்துறை உள் சூழலை நன்கு தெரிந்திருக்க இப்பயிற்சி வழங்கப்படுகிறது. இது நடைமுறைகள், நடத்தை விதிகள், கொள்கைகள் ஆகியவற்றை புரிந்து கொள்ள உதவுகிறது. ஏராளமான வழிகாட்டிக் குறிப்புகளும், கையேடுகளும் சாலைப் பணிகள் நிர்வாகம் குறித்து இந்திய சாலைகள் குழுமத்தால் அவ்வப்போது வெளியிடப்படுகிறது. சாலைப் பணிகள் செயலாக்கத்திற்கும் வழிகாட்டிக் குறியீடுகளுக்கும் இடைவெளி இருக்கத்தான் செய்கிறது. அந்த இடைவெளியினை நிரப்புவதற்கு ஒவ்வொரு சிறப்புப் பிரிவிலும் பயிற்சிகள் மிகவும் அவசியம்.

**நுட்பங்களைக் கற்றுத் தேர்ச்சி பெறவேண்டும்!**

கல்லூரிகளில் பொறியியல் பாடங்களைப் படிப்பதென்பது வேறு; தேர்ந்த அனுபவம் மிக்க பொறியாளரிடம் நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வதென்பது வேறு, பொறியாளர்கள் பயிற்சிகளின் மூலமாக நுட்பங்களைக் கற்றுத் தேர்ச்சி பெறவேண்டுமென்று விரும்புகிறேன். மனித வள மேம்பாட்டில் பயிற்சி ஒரு அடிப்படைக் கருத்தாகும். இது அறிவுறுத்தல் மற்றும் பயிற்சி மூலம் ஒரு குறிப்பிட்ட திறனை விரும்பிய தரத்திற்கு வளர்ப்பதில் அக்கறை கொண்டுள்ளது.

பயிற்சி என்பது மிகவும் பயனுள்ள கருவியாகும். பெரிய நிறுவனங்கள் பணியாளர்களின் பயிற்சிகளுக்காகப் பெரிய அளவில் நிதியைச்செலவு செய்கிறார்கள். பெரும்பாலும் ஆராய்ச்சியையும் வளர்ச்சியையும் சேர்த்து ஒரே பிரிவாக வைத்து பணியாளர்களுக்கு அவ்வப்போது பயிற்சிகளை வழங்கி வருகிறார்கள். அந்த அடிப்படையில்தான் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையமும் பயிற்சி மையமும் இணைந்து செயல்படுகின்றன.

பயிற்சி என்பது ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்கான பணியாளரின் திறன்களை அதிகரிக்கும் செயல் ஆகும். பெரிய நிறுவனங்களில் ஆண்டு தோறும் மொத்தப் பணி நேரத்தில் ஏறக்குறைய 5 விழுக்காடு பணி நேரம் பயிற்சிக்காக ஒதுக்கப்படுகிறது. நெடுஞ்சாலைத் துறையில் பொறியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட நவீன வசதிகளுடன் நெடுஞ்சாலைத்துறைப் பயிற்சி மையம் அமைந்துள்ளது. அந்த வசதிகளை பயன்படுத்தி நெடுஞ்சாலை துறை பொறியாளர்களுக்கு பல்வேறு தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

எந்தவொரு நிறுவனமும் திறமையான பணியாளர்களைப் பெற்றிருந்தால்தான் நன்கு வளரமுடியும். 2022 ஆம் வருடம் தொடங்கி, 5 ஆண்டுகளில் துறையின் அனைத்துப் பொறியாளர்களுக்கும் மற்றும் பிற அலுவலர்களுக்கும் பயிற்சி வழங்கும் வகையில், விரிவான பயிற்சித் திட்டம் (CTP) வடிவமைக்கப்பட்டுள்ளது. விரிவான பயிற்சித் திட்டம் 25.4.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது இப்பயிற்சி திட்டமானது, மொத்தம் 27 தலைப்புகளில் வகுக்கப்பட்டு, இத்துடன் பொறியாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் நடத்தப்பட்டு வருகிறது.

**சிறப்பு வகுப்புகள்!**

2023-24 ஆம் ஆண்டில், 1,150 பொறியாளர்களுக்கும், 646 தொழில்நுட்ப சாராத அலுவலர்களுக்கும், பல்வேறு தலைப்புகளில் பயிற்சித்திட்டத்தின்படி, பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் 15 துணை ஆட்சியர்களுக்கும், தலைமை செயலகத்தின் 110 பிரிவில் உள்ள 24 அலுவலர்களுக்கும் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 2024-2025 ஆம் ஆண்டில், இதுவரை 108 பொறியாளர்களுக்கு பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து பயிற்சிகளின் போதும், காலை வேளையில் யோகா மற்றும் தியான வகுப்புகள், சிறந்த யோகா ஆசிரியர்களால் மனதும், உடலும் சிறக்க வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இவ்வாறு நன்கு ஆலோசித்து உருவாக்கப்பட்டுள்ள பயிற்சி வகுப்புகளை துறையில் புதிதாக இணைந்துள்ள பொறியாளர்கள் நல்ல முறையில் பயன்படுத்தி கொள்வீர்கள் என நம்புகிறேன்.

இவ்வாறு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

இப்பயிற்சி வகுப்புத் தொடக்க விழாவில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் தலைமையுரையாற்றினார்.

விழாவில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டின் திட்ட இயக்குநர் மருத்துவர் இரா. செல்வராஜ், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் க.சேகர், நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் இரா.சந்திரசேகர், தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) மா.முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் தலைமையில், வருகின்ற சட்டப் பேரவைக் கூட்டத் தொடரில் நடைபெறவுள்ள நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கையினை முன்னிட்டு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன தலைவர்/அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எஸ்.விஜயகுமார், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குரானா, நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ்.சிவராசு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.